# இறைவனைப் பிரார்த்திப்போம்.

எம். ஆர். எம். ஹிஜாஸ் - ஆண்டு 5

இவ்வையகத்தில் இறைவன் அவனது பிரதிநிதியாக மனிதனைப் படைத்துள்ளான். மனிதனது தேவைகள் காலத்திற்கேற்ப வேறுபடுவதனால் அத்தேவைகளை இறைவனிடம் பெற்றுக் கொள்வதற்காக வேண்டி பிரார்த்தனை என்ற பேரில் ஒரு சந்தர்ப்பத்தை ஏற்படுத்தித் தந்துள்ளான். இதற்கு அரபு மொழியில் துஆ எனப்படும் . இந்த துஆவை இறைவன் நமக்கு அவனிடம் கேட்டுப் பெற்றுக் கொள்வதற்கு சந்தர்ப்பமாக அமைத்தது மட்டுமல்லாமல் அதனை நமக்கு ஸுன்னத்தான தொழுகை, திக்ர், குர்ஆன் ஓதுதல் போன்று ஒரு வணக்கமாகவும் காட்டித் தந்துள்ளான். இதனைப் பின்வரும் நபி மொழி சுட்டிக் காட்டுகின்றது. பிரார்த்தனை என்பது ஒரு வணக்கமாகும். (ஆதாரம்: திர்மிதி)

அது மாத்திரமல்லாமல் துஆவை ஏனைய ஸுன்னத்தான வணக்கங்களுடன் ஒப்பிடும் போது அது மிகப் பிரதானமான இடத்தை வகிக்கின்றது. இதனைப் பின்வரும் ஆதாரங்களினூடாக விளங்கிக் கொள்ளலாம்.

- அல்லாஹ்விடம் துஆவை விட எந்த ஒன்றும் கண்ணியமானது அல்ல. (ஆதாரம் திர்மிதி)
- எந்த ஒரு வணக்கமும் விதியைத் தட்டமாட்டாது . ஆனால் பிரார்த்தனைக்கு மாத்திரமே அதைத் தட்டுவதற்கு சக்தி உண்டு என நபி (ஸல்) அவர்கள் நவின்றார்கள். துஆவைத் தவிர எந்த ஒன்றும் விதியைத் தட்டாது. (ஆதாரம்: அஹ்மத் , திர்மிதி)
  நாங்கள் நமது சகோதரர்களிடம் எதையேனும் ஒன்றைக் கேட்கும் பொழுது பெரும்பாலும் அவர்கள் கோபமடைகின்றனர். என்றாலும் இறைவனிடம் நாம் கேட்காமல் இருப்பதே அவனைக் கோபத்தில் ஆழ்த்துகின்றது. அதைப் பின்வரும் நபி மொழி சுட்டிக் காட்டுகின்றது. யாராவது அல்லாஹ்விடம் கேட்காவிட்டால் அவன் கோபப்படுகின்றான். (ஆதாரம்: அஹ்மத்)

இன்று இஸ்லாமிய சமூகம் பிரார்த்தனைக்குக் கொடுத்திருக்கும் முக்கியத்துவம் மிகவும் குறைவானதே. நபி (ஸல்) அவர்களும் அவர்களது தோழர்களும் அவர்களுக்குப் பின்னால் வந்த நல்லடியார்களும் அவர்களின் எல்லாத் தேவைகளையும் பிரார்த்தனை மூலமே பெற்றுக் கொண்டார்கள். நாங்களும் எங்களுடைய தேவைகளை நிறைவு செய்யும் ஆயுதமாக துஆவை ஆக்கிக்கொள்ள வேண்டும். அதேபோன்று எமது சமூகத்தையும் அதனைக் கடைபிடிக்கக் கூடியவர்களாக மாற்ற வேண்டும்.

நாம் பிரார்த்தனை செய்யும் போது சில விதிமுறைகளைக் கடைப் பிடிக்க வேண்டியுள்ளது. அவற்றில் மிக முக்கியமானவற்றை நோக்குவோம்:

- துஆவின் நிபந்தனைகள் :

1. **அல்லாஹ்விடம் மாத்திரம் பிரார்த்தித்தல் :**
ஒரு மனிதன் அவனது தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கும் அவனுக்கு ஏற்படுகின்ற கஷ்ட நஷ்டங்களை நீக்கிக்கொள்வதற்கும் அல்லாஹ்வை மாத்திரமே நாடவேண்டும். இதற்கு பின்வரும் குர்ஆன் வசனங்களும் நபி மொழிகளும் சான்று பகர்கின்றன. நிச்சயமாக மஸ்ஜித்கள் அல்லாஹ்வுக்கே உரியன. எனவே அல்லாஹ்வுடன் வேறு எவரையும் அழைக்காதீர்கள். (ஸூரா அல்-ஜின்) என்றாலும் இலங்கை வாழ் மக்களில் பலர் அவனிடம் கேட்டுப் பெற்றுக்கொள்ளாமல் அவ்லியாக்கள், நாதாக்கள், நல்லடியார்களின் கப்ருகளை அனுகி தம்தேவைகளை அவர்களிடம் முன்வைப்பதை நாம் காண்கின்றோம். இவ்வனைத்தும் குர்ஆனுக்கும் நபி வழிக்கும் முரணானவை என மேற்குறிப்பிட்ட வசனம் தெளிவுபடுத்துகின்றது. மேலும் ஒரு நபி மொழியில் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது : நீர் கேட்டால் அல்லாஹ்விடமே கேட்பீராக. நீர் உதவி தேடினால் அல்லாஹ்விடமே உதவி தேடுவீராக. (ஆதாரம் அஹ்மத்)

2. **நல்லதை மாத்திரமே கேட்டல் :**
நாம் பிரார்த்தனை புரியும் போது நல்ல விடயங்களை மாத்திரமே கேட்க வேண்டும். மாறாகப் பாவமான காரியங்களைக் கேட்பதை விட்டும் தவிர்ந்து கொள்ள வேண்டும். ஓர் அடியான் பாவமான காரியங்களைக் கேட்காமல் இருக்கும் காலமெல்லாம் அவனது பிரார்த்தனை ஏற்றுக் கொள்ளப்படும் என நபி (ஸல்) அவர்கள் நவின்றார்கள் . (ஆதாரம் முஸ்லிம்)

3. **ஹராத்தை விட்டும் தவிர்ந்திருத்தல் :**
நம்முடைய உணவு, உடை, குடிபானம் மேலும் மனிதனின் வாழ்க்கையுடன் சம்பந்தப்படும் அனைத்து விடயங்களும் ஹலாலாக இருக்க வேண்டும். ஒருவரின் உணவு, குடிபானம், உடை ஹராத்தினால் நிரப்பப்பட்டிருக்கும் போது அவனது துஆ எவ்வாறு ஏற்றுக் கொள்ளப்படும் என நபி (ஸல்) அவர்கள் நவின்றார்கள். (ஆதாரம்: முஸ்லிம்)

- துஆக் கேட்கும் போது கடைப்பிடிக்க வேண்டிய ஒழுக்கங்கள் :

1. **அல்லாஹ்வைப் புகழ்ந்து, நபி(ஸல்) அவர்கள் மீது ஸலவாத் சொல்லல்.**

துஆக் கேட்கமுன் அல்லாஹ்வைப் புகழ்ந்து நபி (ஸல்) அவர்கள் மீது ஸலவாத் சொல்ல வேண்டும். இவ்விரண்டையும் கடைப்பிடிக்காமல் பிரார்த்தனை செய்த ஒருவரை நபி (ஸல்) அவர்கள் அழைத்து பின்வருமாறு கூறினார்கள் : துஆக் கேட்பவனே நீ அவசரப்பட்டு விட்டாய். நீ பிரார்த்தனை செய்தால் அல்லாஹ்வைப் புகழ்ந்து என் மீது ஸலவாத் சொல்வீராக. பின்பு நீ விரும்பியதைக் கேள். (ஆதாரம்:திர்மிதி)

2. **கையை உயர்த்துவது :**

நபி (ஸல்) அவர்கள் பிரார்த்தனை புரியும் போது அவர்களது இரு கைகளையும் உயர்த்துவதை நான் கண்டுள்ளேன் என அபூ மூஸா அல் அஷ்அரி (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்.

3. **சப்தத்தை அதிகம் உயர்த்தாமல் இரகசியமாகக் கேட்டல் :**

மக்கள் துஆவின் சத்தத்தை உயர்த்தினார்கள் . அப்போது அவர்களிடம் மக்களே நீங்கள் மனதுக்குள்ளேயே கேளுங்கள். ஏனெனில் நீங்கள் செவிடனையோ, மறைந்திருப்பவனையோ அழைப்பதில்லை. மாறாக நீங்கள் உங்களுடன் இருக்கும் கேட்பவனையும் நெருக்கமானவனையும் அழைக்கின்றீர்கள். (ஆதரம் புகாரி)

♦ **துஆக் ஏற்றுக் கொள்ளப்படுவதற்கான சில காரணிகள் :**

1. **தூய எண்ணத்துடன் கேட்டல்**

இதனைப் பற்றி இறைவன் பின்வருமாறு கூறுகின்றான். நீங்கள் வணக்கத்தையே அவனுக்கே தூய்மையாக்கியவர்களாக அவனை அழையுங்கள். (الأعراف)

2. **பர்ளான வணக்கங்களுக்குப் பின் ஸுன்னத்தான வணக்ங்களின் பால் கூடிய கவனம் செலுத்துதல்.**

அடியார்கள் ஸுன்னத்தான அமல்களைச் செய்யும்போது அல்லாஹ் அவர்களை விரும்புவதாகவும் அப்படி விரும்பிவிட்டால் அவர்கள் கேட்பதைக் கொடுப்பதாகவும் அல்லாஹ் கூறுவதாக நபியவர்கள் ஒரு ஹதீஸ் குத்ஸியில் குறிப்பிட்டுள்ளார்கள்.

3. **நன்மையை ஏவித் தீமையைத் தடுத்தல் :**

அல்லாஹ்வின் மீது ஆணையாக நீங்கள் நன்மையை ஏவுங்கள். தீமையைத் தடுங்கள். இல்லாவிடின் அல்லாஹ் அவனது தண்டனையை இறக்கிவிடுவான். பின்பு நீங்கள் அவனை அழைத்தாலும் உங்களுக்கு விடையளிக்கப்படமாட்டாது என்று நபி (ஸல்) அவர்கள் நவின்றார்கள் (ஆதாரம் திர்மிதி)

♦ **துஆ ஏற்றுக் கொள்ளப்பட அதிக வாய்ப்புள்ள சில முக்கியமான நேரங்கள்**

1. **தஹஜ்ஜுத்துடைய நேரம் :**

அந்நேரத்தில் இறைவன் கீழ் வானத்திற்கு இறங்கி பின்வருமாறு கூறுகின்றான். யாராவது என்னிடம் துஆக் கேட்டால் அவனுக்கு நான் விடையளிப்பேன். யாராவது என்னிடம் பாவமன்னிப்பு வேண்டினால் அவனுக்கு நான் பாவமன்னிப்பளிப்பேன். (ஆதாரம் புகாரி)

2. **அதானுக்கும், இகாமத்துக்கும் இடைப்பட்ட நேரம் :**

இவ்விரண்டிற்கும் இடைப்பட்ட நேரத்தில் கேட்கப்படும் துஆ தட்டப்படமாட்டாது. எனவே நீங்கள் அந்நேரத்தில் துஆக் கேட்டுக்கொள்ளுங்கள் என நபி (ஸல்) அவர்கள் நவின்றார்கள் .(ஆதாரம்: அபூ தாவூத் திர்மிதி)

3. **ஸஜுதுடைய நிலை :**

ஒரு அடியான் தனது இறைவனுக்கு மிக நெருங்கும் இடம் ஸுஜூதாகும். எனவே அதில் நீங்கள் துஆக் கேட்பதை அதிகரித்துக் கொள்ளுங்கள் என நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். (ஆதராம்: முஸ்லிம்)

4. **சேவல் கூவும் போது :**

சேவல் கூவும் சத்தத்தை நீங்கள் கேட்டால் இறைவனிடம் அவனது அருளைக் கேட்டுப் பெற்றுக் கொள்ளுங்கள். ஏனெனில் அது ஒரு வானவரைக் கண்டு விட்டது என நபி (ஸல்) அவர்கள் நவின்றார்கள் . (ஆதாரம்: புகாரி)

மேற்கூறப்பட்ட ஒழுங்கு விதிகளைப் பின்பற்றி பிரார்த்தனையில் ஈடுபடும் சந்தர்ப்பத்தில் அந்தப் பிரார்த்தனை ஏற்றுக் கொள்ளப்படுவதற்கு அதிக வாய்ப்புண்டு . எனவே, வல்ல இறைவன் அதற்கு எமக்கு அருள் புரிவானாக.